உ

# சைவ நற்சிந்தனைகள்



பிரம்மஶ்ரீ ப. சிவானந்த சர்மா B.A. (Hons)

(கோப்பாய் சிவம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(52)

PROF. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

1463. S.C

உ

# சைவ நற்சிந்தனைகள்

ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் பழைய மாணவர்

பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா B.A.(Hons)

[கோப்பாய் சிவம்]

*வெளியீடு*

யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி

பவளவிழா சார்பாக

சர்வானந்தமய பீடம்

10 - 09 - 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளியீட்டுத் தரவுகள்


| | |
|---|---|
| நூலின் பெயர் | சைவ நற்சிந்தனைகள் |
| மொழி | தமிழ் |
| விடயம் | சைவ சமய சிந்தனைகள் |
| கட்டுரையாசிரியர் | பிரம்மஸ்ரீ ப சிவானந்த சர்மா B.A.Hons.<br>(கோப்பாய் சிவம்)<br>கந்தசாமி கோவிலடி,<br>இணுவில், சுன்னாகம், ஸ்ரீலங்கா.<br>தொ.பே. 021 222 6004 |
| வெளியீடு | சர்வானந்தமய பீடம், இணுவில். |
| கணினி வடிவமைப்பு | ஸ்ரீவித்யா கணினி அச்சகம்,<br>இணுவில், சுன்னாகம், ஸ்ரீ லங்கா. |
| அச்சுப்பதிப்பு | மீனாட்சி அச்சகம், நல்லூர்.<br>தொ.பே. 021 222 3586 |
| பக்கங்கள் | 40 |
| முதற்பதிப்பு | 10 – 09 – 2006 |
| விலை | ரூபா 50.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எந்த பக்தன் நம்பிக்கையுடன் எந்த வடிவத்தை அர்ச்சிக்க விரும்புகிறானோ அவனுடைய அசையா நம்பிக்கைக்குத்தக்க வடிவத்தை நான் மேற்கொள்கிறேன்".

- **பகவான் ஸ்ரீகிருஷ்ணர்.(பகவத்கீதை, ஞா.யோ. 21)**

"யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வ மாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்"

- **அருணந்தி சிவாச்சாரியார் (சிவஞான சித்தியார்)**

"அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவ ரிறையவரெனவடி வுடையவர்"

- **நம்மாழ்வார் (நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலிலுள்ள சிந்தனைகளில் சில
எழுபதுகளில் இலங்கை வானொலியில்
ஒலித்தவை.
ஏனையவை இலங்கையில் நடந்த
உலக இந்து மாநாட்டையொட்டி
'வலம்புரி' பத்திரிகையில்
வெளியானவை.
இவ்விரு ஊடகங்களுக்கும் எனது
அன்பு நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்வான உதயகாலம்

நம்மிற் பலர் உஷத் காலத்தின் உந்நதமான சௌந்தர்யத்தைக் கண்டு அநுபவிக்கத் தவறிவிடுகின்றோம். சிற்றஞ் சிறுகாலை பலபலவென்று விடிந்து கொண்டிருக்கின்ற வேளையில் துயில் நீக்கி எழுபவர்களது உள்ளத்திலே ஒரு புத்துணர்ச்சி பிறக்கிறது.

உலக இருள் அகன்று ஒளி பரவும் அந்த வேளையில் நமது உள்ளத்தின் துயர இருளும் மெல்ல அகன்று உள்ளொளி பரவுவதை அநுபவபூர்வமாக உணரலாம். வெளி உலகத்தின் விபரீதமான பேரொலிகளும் இரைச்சல்களும் இல்லாமல் பட்சிகள் பண்ணிசைக்கும் இயற்கை ஒலிகள் மட்டும் நிறைந்திருக்கும் அந்த வைகறைப் பொழுது இறை தியானத்துக்கு இசைவான ஒன்று.

காலையும் இரவும் சந்தித்துப் பிரிகின்ற அந்த ரம்மியமான நேரத்தில் செய்யும் இறை வணக்கத்தை சந்தியாவந்தனம் என்பர். சந்தியா காலத்துக்குரிய இந்தப்பிரார்த்தனை எமது காலைக் கடன்களுடன் ஒன்றிணைந்த முக்கியமான ஒரு நித்திய கருமம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

விக்கினங்கள் நீங்கி யாவும் நலம்பெற நிறைவேற வேண்டும் என்று வேண்டும் விநாயக துதியும் நித்தியகருமத்தை இனிது நிறைவேற்றுவேன் என்கிற சங்கல்பமும் இறைவன் திருநாமங்களைச் சொல்லி நமது உடலின் உறுப்புக்களைக் காப்பிட்டுக் கொள்வதும், பிராணாயாமம் ஆகிய சுவாசக்கட்டுப்பாட்டுப் பயிற்சியும் இந்தச் சந்தியாவந்தனத்தில் இடம் பெறுகின்றன.

நடந்து முடிந்து விட்டநாளில் விட்ட தவறுகளையும் செய்யத் தவறிய நற்கருமங்களையும் நினைத்துப் பார்ப்பதற்கு உகந்த தருணம் உஷத்காலம் எனப்படும் இந்த உதயகாலம் தான். தெரிந்தோ தெரியாமலோ நடந்து விட்ட தவறுகளுக்காக வருந்திப் பிரார்த்திக்கும் போது இனிமேலும் அப்படிப்பட்ட தவறுகள் நேராமல் காக்கும் துணிவைப் பெறுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தின் அழுக்கை அகற்றி உறுதியையும் தூய்மையையும் பெறுவதற்கான இலகுவான யோகப் பயிற்சியே பிராணாயாமம். சலனமடையும் மனத்தின் சஞ்சலத்தைப் போக்கி அமைதியை ஏற்படுத்த இது உதவுகிறது.

புலரும் பொழுதில் தூங்குவது நமது உடலுக்குக் கேடு விளைவிப்பதொன்று எனச் சுகாதார ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. முன்இரவில் போதிய அளவு தூங்குவதும் பின்இரவிலே இயன்ற வரையில் தூக்கத்தை நீக்குவதும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அடிப்படையான ஒரு நற்பழக்கம். இந்தப் பழக்கத்தை நமக்கு வழக்கமாக்குவதற்காகத்தான் நமது ஆலயங்களிலே திருவனந்தல் என்று சொல்லி உஷத் கால பூஜையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அதிகாலையில் துயில் நீத்ததும் விக்கினமில்லாத வெற்றியை நல்கும் விக்கினேஸ்வர வழிபாடும் அங்கங்களுக்கான காவலிடுதலும் தூய்மையும் தைரியமும் நல்கும் சூரிய நமஸ்காரமும் உடல் உளம் என்பவற்றைக் கட்டுப்படுத்தும் பிராணாயாமம் என்ற யோகப் பயிற்சியும் இணைந்த வைகறைப் போதின் வழிபாடு முடிந்தவுடன் ஒரு சுறுசுறுப்பையும் புத்துணர்ச்சியையும் நாம் அனுபவிக்கமுடியும். இது அன்றைய தினத்தை இனிமையானதாக்க உதவுகிறது. நமது தினசரி வாழ்க்கை சந்தியாவந்தனத்துடன் தொடங்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம பஜனை

சங்கீத சாஸ்திரத்திலே ஒவ்வொரு ஸ்வரங்களுக்கும் சில அளவீடுகள் (அதிர்வெண்) சொல்லப்படுகின்றன. அவற்றுக்கென்று குறித்துள்ள அதிர்வெண்களிலிருந்து வேறுபடும் போது இசைப் பிராமணம் தவறிவிடுகிறது

விஞ்ஞான ரீதியாக ஒவ்வொரு அக்ஷரங்கள் ஒலிகளுக்கும்கூட குறிப்பிட்ட அதிர்வெண்களை நியமித் திருக்கிறார்கள். அந்தந்த ஒலிகள் அந்தந்தத் தன்மையோடு ஒலிக்கும்போது அதற்குறிய சக்தி வெளிப்படுகிறது.

ஆகாயத்திலே விமானம் போய்க்கொண்டிருக்கின்ற போது சில வேளைகளில் நமது வீட்டிலே இருக்கிற பாத்திரங்கள் அதிர்வதைக் காண்கிறோம். அணிவகுத்துச் சென்ற படை ஒன்றின் ஓசை அதிர்வினால் பாலம் ஒன்று இடிந்து விழுந்த சம்பவம் முன்பு ஒருநாட்டில் நடந்திருக்கிறது.

இவையெல்லாம் ஓசை ஒலிகளுக்கு உள்ள சக்தியை பிரத்தியக்ஷமாக நமக்கு நிருபிக்கின்றன. "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்றும் ஏழிசையாய் இசைப்பயனாய் இருப்பவன் என்றும் நாயன்மாரால் போற்றப்பட்ட இறைவன்கூட இத்தகைய சக்திகளுக்குக் கட்டுப்பட்டவன்தான்

அகண்ட நாம பஜனைகள், கூட்டுப் பிரார்த்தனைகள் நாமார்ச்சனைகள், நாமஜெபங்கள் என்பன இவற்றைத்தான் எடுத்துக்கூறுகின்றன. அன்பர்கள் பலர் கூடியிருந்து உளத் தூய்மையுடன் ஆண்டவனைத் துதித்துப் பாடும்போது அங்கு அபரிமிதமான சக்தி உண்டாகிறது. ஆண்டவனின் நாமங்களைச் சரியானபடி அக்ஷரசுத்தமாக அர்ச்சிக்கும்போதும் திரும்பத் திரும்ப ஒரே நாமத்தை அல்லது மந்திரத்தை ஜபிக்கும்போதும் இதுவே நிகழ்கிறது. இத்தகைய செயல்கள் அற்புதங்கள் பலவற்றை நமக்கு முன்னே நிகழ்த்தவல்லன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமநாமத்தை ஜபம் செய்பவர்களும் ஸ்ரீராமஜெயம் எழுதுபவர்களும் அபரிமிதமான சக்தியையும் அற்புதமான மனச் சாந்தியையும் பெறுகிறார்கள். ராமநாமத்தின் மகிமை ஸ்ரீராமபிரான் மகிமையைக் காட்டிலும் அதிகமானது. ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி சமுத்திரத்தைத் தாண்டி இலங்கைக்கு வரப் பாலம் அமைத்தார். ராமதூதனான அனுமான் இலங்கை வருவதற்கு ராமநாமமே பாலமாக அமைந்தது. ராம ராம ராம ராம என்ற மந்திர உச்சாரனத்துடன் அந்தப் பெரும் சமுத்திரத்தைத் தாண்டி விட்டான் அனுமான்.

இன்றும் பல அற்புதங்கள் நிகழ்த்தி அவதார புருஷர்களாக மதிக்கப் பொறுவோரெல்லாம் ராம நாம ஜெபத்தினாலேயே மேல் நிலையை அடைந்துள்ளார்கள். ராம நாமம் மாத்திரமல்ல, ஓம் நமோ நாராயணாய என்கிற அஷ்டாக்ஷரம் சரவணபவ என்கிற ஷடக்ஷரம் அல்லது அவற்றுக் கெல்லாம் மேலான பஞ்சதசாக்ஷரீ என்னும் சக்தி மந்திரம், நமசிவாய என்கிற சிவபஞ்சாக்ஷர மந்திரம் இவை எதுவானாலும் நாம ஜெபமாகவோ நாம பஜனையாகவோ பயன்படுத்தி மேல் நிலை அடைய வழிசெய்யும் பெரும் செல்வங்களாகும்.

இறைவனுடைய நாமத்தை பக்தியோடும் நம்பிக்கையோடும் உச்சரித்துக்கொண்டே இருப்பவர்களுக்குத் துன்பம் என்பதே கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஷ்காமிய கர்மங்கள்

"கடமையைச் செய், அதற்கான பலனை எதிர்பார்த்திராதே" என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பகவத் கீதையிலே அருளி யிருக்கின்றார். செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் பிரதிபலன்களை நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் பலன் எதையும் கருதாமல் நற்கருமங்களை மன நிறைவோடு செய்வதே மேலானது. இதைக் கர்மயோகம் என்பர்.

இவையெல்லாம் நமக்கு இயலாத பெரிய விஷயங்கள் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் கர்மயோகமானது நாமெல்லாம் அநுஷ்டிக்கக் கூடிய ஒன்றுதான். நமக்குரிய கடமைகளை நாம் ஒழுங்காகத் தினமும் நிறைவேற்றுவதே ஒருவகையில் கர்மயோகம் தான்.

நித்திய கர்மங்களும் தினசரிப் பிரார்த்தனைகளும் ஆலய வழிபாடுகளும் எமது நாளாந்தக் கடமைகள். நமக்கொரு துன்பம் நேர்ந்த வேளையில் அல்லது மகிழ்ச்சியான சம்பவங்கள் நடைபெறுகிற வேளையில் மாத்திரம் நாம் இறைவனை வழிபாடு செய்வோமானால் அது காமியத்தின் பாற்பட்டது (காரணத்தோடு கூடிய எமது தேவைகளை முன்னிட்டு நடத்தப் பெறும் கர்மாக்கள்.) அப்படியில்லாமல் தினசரியோ அல்லது இயன்ற பொழுதிலெல்லாமோ ஆலயம் சென்று வழிபாடாற்றி வருவோமானால் அது நமது மனச்சாந்தியை வளர்த்து மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

நமக்கு எதைச் செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டும், எப்பொது செய்யவேண்டும் என்பதெல்லாம் ஆண்டவனுக்குத் தெரியும். அதனால் ஆண்டவனிடம் நாம், "எனக்கு அதைக் கொடு" "இதைக் கொடு" என்று வேண்டிக் கொள்வது அநாவசியமல்லவா? "நமக்கு நல்லதைச் செய், நமக்கு மட்டுமல்லாமல் முழு உலகத்துக்குமே நல்லதைச் செய். தப்பித் தவறி நமக்குத் துன்ப துயரங்கள் ஏற்படுமானால் அவற்றைத் தாங்கிக் கொள்ளும் சக்தியையும் நமக்குக் கொடு" என்று ஆண்டவனிடம் வேண்டிக் கொள்வது நமது பரந்த மனப்பான்மையைக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் ஆலயங்களிலே பூஜை வழிபாடுகள் செய்யும் போது அர்ச்சனை செய்வது வழக்கம். யார் பெயரில் அர்ச்சனை என்று அர்ச்சகர் கேட்கிறார். நாம் நமது பெயரையோ நமக்கு வேண்டியவர்கள் பெயர்களையோ சொல்கிறோம். இது ஒருவகைப் பிரார்த்தனைதான். நமக்கு ஏற்படுகின்ற நன்மை தீமைகளை இல்லாமல் செய்யும்படி வேண்டுதல் செய்யமுடியாது. அதாவது, விதிப்படி நமக்கு நடக்கவேண்டியவை நடந்துதான் தீரும். ஆனால் அவற்றின் தாக்கங்களைச் சிறிது குறைக்கும்படி இறைவனை நாம் வேண்டிக்கொள்ளலாம்.

அதேபோல நமக்கு விளைகின்ற தீமைகளினாலும் துன்பங்களினாலும் நம் மனம் பேதலித்துவிடாமல் - மனம் தளர்ந்து தடுமாறாமல், வருபவற்றை எதிர் கொண்டு தாங்கிக் கொள்ளக் கூடிய மனத் தைரியத்தைக் கொடுக்கும்படி பிரார்த்தனை செய்வது பொருத்தமானது. பல சந்தர்ப்பங்களில் சுவாமி பேரில் அர்ச்சனை செய்யுங்கள் என்றோ அம்பாள் பெயரிலே அர்ச்சனை செய்யுங்கள் என்றோ பலர் வேண்டிக் கொள்வதை நாம் காண்கின்றோம். இதுவும் நிஷ்காமிய கர்மங்களின் பாற்பட்டதே.

நாம் ஆலயத்துக்குச் சென்று வழிபாடாற்றுவது அவசியம். பூஜைகளில் கலந்து கொள்வதும் அர்ச்சனைகள் செய்விப்பதும் நல்ல இந்துக்களின் கடமை. இப்படி நமக்கென விதிக்கப்பட்ட கடமைகளைப் பயன் கருதாது செய்யும் வகையில் தான் ஆலயங்களிலே சுவாமி பேரிலே அர்ச்சனைகள் செய்கிறோம். சுவாமி பேரில் செய்தால் அது லோக க்ஷேமத்தைக் கருதும். முழு உலகத்துக்கும் நன்மை கிடைக்கும்போது நமக்கு நன்மை கிடைக்கும் அல்லவா?

நமது கடமைகளை நாளாந்தம் நாம் நன்கு நிறைவேற்றுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியும் செல்வமும்

இந்த உலக வாழ்க்கையில் நமது தேவைகள் அநேகம். நமது ஆசைகளுக்கோ அளவில்லை. குறைந்தபட்சம் நமது நல்வாழ்விற்கு வேண்டியவை எவை என்று சிந்திக்கின்றபோது கல்வி செல்வம், தைரியம், அழகு என்று இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம்.

எது எப்படி இருப்பினும் கல்வி செல்வம் தைரியம் ஆகிய மூன்றுக்கும் அதிதேவதைகளான சரஸ்வதி லக்ஷ்மி துர்க்கா பரமேஸ்வரி ஆகியோரை வேண்டி வழிபடுவது உலகியல் வழக்கம். லோகமாதாவாகிய அம்பிகையை உபாசிப்பவன் அம்மூன்றையும் பெறுகிறான். "ஸசாமர ரமா வாணீ ஸவ்ய தக்ஷிண ஸேவிதா" என்று ஸ்ரீ லலிதா திரிபுர சுந்தரியின் சஹஸ்ர நாமத்தில் ஒரு நாமம் வருகிறது. சரஸ்வதியும் லக்ஷ்மியும் அம்பிகையின் இரு பக்கமும் அமர்ந்திருந்து சாமரம் இரட்டுகின்றனர் என்பது இதன் பொருள். அப்படியாயின் கல்வி, செல்வம், தைரியம் என்பவற்றை அவள் வழங்குவதில் என்ன சிரமம்.

ஆனால் நமக்கு முதலில் வேண்டினது என்ன என்பதை அம்பிகையே தீர்மானித்துவிடுகிறாள். இது ஆசார்ய சுவாமிகளின் வாக்கு. அதற்கு அவர் எடுத்துக்கூறும் பாடல் இது.

ஸரஸ்வத்யா லக்ஷ்ம்யா விதிஹரி ஸபத்நோ விஹரதே
ரதே: பாதிவ்ரத்யம் ஸிதிலயதி ரம்யேண வபுஷா
சிரம் ஜீவந்நே க்ஷபித பசு பாச வ்யதிகர:
பராநந்தாபிக்யம் ரஸயதி ரஸம் த்வத் பஜநவாந்.

அம்பிகையைப் பூஜிப்பவர்கள் பிரம்மவிஷ்ணுக்கள் பொறாமைப் படும் வகையில் கல்வியையும் செல்வத்தையும் அடைகிறார்கள். அது மட்டுமா? அழகில் மன்மதனையும் வென்றுவிடுவதால் ரதியைக் கூடக் கலங்க வைக்கிறார்கள். ஈற்றில் பாசவினையகன்று பரமானந்த நிலையை எய்துகிறார்கள் என்பது இந்த ஸ்லோகத்தின் பொருள்.

அதாவது போக மோக்ஷப்ரதாயினீ என்று இன்னொரு லலிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸஹஸ்ரநாமம் துதிப்பதற்கினங்க லௌகிக இன்பங்களையும் முக்தி இன்பத்தையும் ஒருசேரத் தருவது அம்பாளின் கருனை.

எமக்கு முதலில் தரவேண்டியது கல்வியே என்று தேவி தீர்மானித்து விடுகிறாள் கல்வியறிவில்லாமல் பெறுகின்ற செல்வத்தினாலும் தைரியத்தினாலும் எவ்வித பயனுமில்லை. அவற்றை எவ்விதம் பயன்படுத்துவது என்ற ஞானத்தை வழங்குபவள் சரஸ்வதி அல்லவா? அதனால்தான் ஆதி சங்கரர் தமது ஸ்துதியில் ஸரஸ்வத்யா என்று ஆரம்பிக்கின்றார் என்று ஆசார்ய சுவாமிகள் விளக்கம் தருகிறார் ஓரிடத்தில்.

லௌகீகத்தில் எல்லோருமே லக்ஷ்மீ கடாக்ஷத்தையே விரும்பிக் கேட்கிறார்கள். ஆனால் வெண்டுவார் வேண்டுவனவற்றைக் கொடுப்பதோடு நில்லாமல் சமயமறிந்து யாருக்கு எப்போது எதைக் கொடுக்க வேண்டும் என்பதையும் தீர்மானம் பண்ணிவிடுகிறாள் நமது தாய். எவற்றை எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்ற ஞானத்தை ஸரஸ்வதி கடாக்ஷமே நமக்கு வழங்கும்.

கல்வித் தெய்வம் நமக்கு நல்வித்தையையும் ஞானத்தையம் நல்கவேண்டுமென்று பிரார்த்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கையாற் பயனென்

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விரு மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்.

என்கிறார் மணிவாசகப் பெருந்தகையார். ஏழேழு பிறப்புக்கள் பிறந்து இறந்துகொண்டிருந்தாலும் இந்த ஆன்மா ஒன்றே. அதன் ஈடேற்றமே இறுதிநோக்கு.

ஈசனடி சேரும் இறுதி நோக்கோடு பயணம் மேற்கொண்டிருக்கும் நமக்கு இவ் வுடலங்கள் எல்லாம் சாதனங்களாகும். சாதனைகளை நாம் நடத்தவேண்டிச் சர்வேஸ்வரன் தந்த மாயையின் பொய்த் தோற்றங்களே இவை. இவ்வுடலையும் உலக வாழ்க்கையையும் இகழ்ந்துரைக்கும் பெரியோர்களை நாம் அதிகம் காணலாம்

ஆனால் இந்த மானுடப்பிறப்பையும் வாழ்க்கையையும் விதந்துரைப்போரும் இல்லாமலில்லை இவ்விருவகையிலான கருத்துக்களையும் நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியவர்களாகிறோம்.

"காயமே இது பொய்யடா -வெறும்
காற்றடைத்த பையடா" என்பது சித்தர் பாடல்

"வாழ்வாவது மாயம்-இது
மண்ணாவது திண்ணம்" என்பதும் இத்தகையதே

அதே சமயத்தில் காய சித்தி பெற்றுச் சாவை வெல்வதே வீடு. என்ற கருத்தையும் நாம் புறந்தள்ளிவிட முடியாது.

சுவர் இருந்தால் தான் சித்திரம் எழுதலாம். ஆன்மாக்கள் தமது ஆணவாதி மலங்களை நீக்கி அரனடி சேர்வதற்கு ஆதாரம் வேண்டும். அதற்குத் திருவருட் துனை எவ்வாறுள்ளதொ அதே அளவு, மாயை வடிவான இவ்வுலக வாழ்க்கையும் எதிர்மறையாகத் துணைபுரிகிறது. வினைப் பயன்களை நாம் அனுபவிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11463 S-C

உதவுகின்றவை இந்த உடலும் உலக வாழ்க்கையும். "கொன்றால் பாவம் தின்றால் தீரும்" என்பது பழமொழி. தின்றால் என்பதற்கு அனுபவித்தல் என்று இங்கே பொருள். செய்த கர்ம வினைகள் யாவற்றையும் நாம் அனுபவித்தே ஆக வேண்டும். அதற்கு உதவும் சாதனங்கள் உடலும் உலகமும். அவற்றைச் சாதனைகளுக்குப் பயன்படுத்துவதில்தான் நமது திறமை இருக்கிறது

"*புழுவாகிப் பிறப்பினும் புண்ணியா உன்னடி என்மனத்தே வழுவா திருக்க வரம்தர வேண்டும்*" என்கிறார் அப்பர்.

"*நற்றவா உன்னை நான் மறக்கினும்*
*சொல்லும்நா நமச்சிவாயவே*" எனபதும் இத்தகையதே.

பிறவி எதுவானாலும் இறையடி மறவாத இனிய வாழ்வுதான் முக்கியம்

*குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயில் குமிண்சிரிப்பும்*
*பனித்த சடையும் பவழம்போல் மேனியில் பால்வெண்ணீறும்*
*இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்*
*மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே*

என்கிறார் திருநாவுக்கரசு சுவாமிகள்

காயமே இது பொய்யடா என்ற கருத்துடனும் வாழ்வாவது மாயம் என்ற கருத்துடனும் இந்தத் தேவார வாக்கியங்கள் முரண் பட்டனவே அல்ல. கரும்பு இனிக்கும் என்ற வார்த்தைக்கும் கரும்பு கசக்காது என்ற வார்த்தைக்கும் உள்ள தொடர்புதான் இதற்குள்ள தொடர்பும். எதிர்மறையாகச் சொல்லப்பட்ட அதே கருத்துக்கள் இவை.

மாய உடலையும் மாயவாழ்க்கையையும் மகேசன் பணிக்கே பயன் கொள்ளவேண்டுமென்பதே ஈற்றில் கிடைக்கும் உண்மை. சித்திரம் எழுதுவதற்கேற்ற வகையில் சுவரைத் தயார் செய்வது போல வீடு பேறு அடைவதற்கேற்ற வகையில் இந்த வாழ்வை நாம் தயார் செய்தாக வேண்டும்.

ஆக்கை யாற் பயனென் அரன் கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ்
ஆக்கை யாற்பயன் என்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடும் பணி

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே"

என்பது திருமூலர் வாக்கு. எங்களை இந்தப் பூமியிலே இறைவன் படைத்திருக்கிறான். அதற்குக் காரணமில்லாமல் இல்லை. நாம் முன்பு செய்த நல்வினை தீவினைப் பயன்களை அனுபவித்துத் தீர்ப்பதற்காகத்தான் நாமெல்லாம் பிறந்திருக்கின்றோம். நாம் இதைத் தெரிந்து கொண்டவர்கள் என்றால் இனியும் ஒரு பிறவித்துன்பம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அதற்கு ஒரே வழி இறைவன் புகழைப் பாடிப் பரவுதலேயாகும்.

நாமெல்லாம் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள். முன்னே முடிந்துவிட்ட கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் ஆகிய யுகங்களில் இறைவனை அடைவதற்கு எத்தனையோ ஜபங்களையும் பூஜை புனஸ்காரங்களையும் வேள்விகளையும் செய்தாக வேண்டியிருந்தது. ஆனால் இறைவன் நம்மீது கொண்ட பெருங் கருணை காரணமாக நமக்கெல்லாம் மிக இலகுவான வழியைக் காட்டியிருக்கிறார். பக்தியோடு பஜனை செய்வது ஒன்றே கலியுகத்தில் பரகதி அடைவதற்குப் போதுமானதாகும்.

பக்தியோடும் இசையோடும் கூடிய பாடல்கள் வெகு சுலபமாக ஆண்டவனை நமக்கருகே அழைத்துவந்துவிடும். "ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய் இருப்பவன் இறைவன்" என்று பாடுகிறார் சுந்தர மூர்த்தி நாயனார். ஏழு ஸ்வரங்களில் பிறந்த இசையாகவும் அதன் வடிவாகவும் இருப்பவன் இறைவன். அது மட்டுமா? என்னுடைய தோழனுமாய் என்கிறார் சுந்தரர். கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும் அன்புத் தோழனுமாய் இருக்கின்றான் இறைவன்.

பண்ஒன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன்

என்கிறார் திருஞானசம்பந்த சுவாமிகள். பண்ணிசைபாடும் அடியவர்களுக்கு அடியவராகிவிடும் ஆண்டவனது எளிமைதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னே! அவனைப் புகழ்ந்து பாடுவதில் நமக்கென்ன சிரமம்.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்நெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

உண்மை அன்புடன் கசிந்து கண்ணீர் பெருகி ஓதுகின்றவர்களை அவன் நன்நெறிப் படுத்துகின்றான். இதுவும் சம்பந்தர் வாக்கு.

"தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்" என்கிறார் திருநாவுக்கரசர். "பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என்கிறார் அருணகிரிநாதர்.

நம்மைப் பிறப்பித்த நாயகனை நல்ல தமிழால் போற்றித் துதித்துப் புகழ்ந்து கவி பாடுதல் நமது கடமையல்லவா? ''முத்தமிழால் வைதாரையும் வாழவைப்போன்'' என்பதும் அருணகிரிநாதரது அருமையான வாக்கு.

''பூமியில் புகழ்தக்க பொருளே'' என்று இறைவனை விளிக்கிறார் அப்பர் சுவாமிகள். பொன்னையும் பொருளையும் பூவையரையும் புகழ்ந்து புகழ்ந்து பாடுவதல்ல நமது பணி. பூமியில் புகழத்தக்க ஒரேபொருள் அந்தப் பரம்பொருளே என்பது அவர் துணிபு.

இறைவன் எங்களைச் சும்மா படைக்கவில்லை. நன்றாகப் படைத்திருக்கின்றான். ஓரறிவு படைத்த தாவரங்களாகவோ ஐந்தறிவு படைத்த விலங்குகளாகவோ படைக்காமல் ஆறறிவு படைத்த மனிதராகப் படைத்த அவனது கருணைதான் என்னே! அதுவும் கூன் குருடு செவிடு போன்ற குறைபாடு இல்லாமல் முழுமனிதராக நம்மைப் படைத்திருக்கின்றான்.

அரிது அரிது மானிடராதல் அரிது
கூன்குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது

என்று ஔவைப் பிராட்டி சொல்லியிருக்கிறார் இப்படிக் குறையற்ற முழு மனிதராக நாம் பிறந்திருப்பதற்கு மகிழவேண்டாமா?

எம்மை நன்றாகப் படைத்த இறைவனை நன்றாகத் தமிழ் செய்து வாழ்த்துவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கந்தன்

ஸ்கந்த என்பதற்குப் பற்றுக்கோடு என்றொரு பொருளும் உண்டு. வலியற்றவர்களுக்கெல்லாம் வலிமையான ஒர பற்றுக்கோடு அவசியம். கடலில் தத்தளிப்பவன் தன் கையில் ஒரு பலகைத் துண்டு கிடைத்தால் அதனைப் பற்றிக் கொண்டு கரையேறிவிட முயற்சிக்கின்றான். மூப்படைந்த தள்ளாடும் மனிதன் ஊன்று கோல் ஒன்றைப் பற்றுக் கோடாகக் கொண்டு நடக்கிறான்.

நாமெல்லாம் சம்சார சாகரத்திலே சிக்கித் தத்தளிக்கின்றோம். இந்த உலகவாழ்க்கை என்ற துன்பத்திலெ சிக்கி நின்று தடுமாறுகின்றோம். நமக்கெல்லாம் பற்றுக் கோடாக இருப்பவன் ஸ்கந்தன்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்று திருவள்ளுவர் கூறுகிறார்

இந்த உலகப் பற்றுக்கள் என்ற துன்பங்களிலிருந்து விடுபடவேண்டுமானால் இறைவனுடைய பாதங்களை நமது பற்றுக் கோடாக எண்ணி இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும். பற்றில்லாமல் இருப்பது நமக்கெல்லாம் மிகவும் கஷ்டமான காரியம். அதற்காகத்தான் இந்த ஏற்பாடு.

நம் குழந்தை ஏதோ ஒரு நல்ல பொருளை எடுத்து விடுகிறது. கேட்டால் தரமாட்டேன் என்கிறது. அதை வைத்து விளையாட ஆசைப்படுகிறது குழந்தை. அப்பொருளை அக் குழந்தை உடைத்துவிடும் என நாம் பயப்படுகிறோம். எனவே என்ன செய்கிறோம். குழந்தைக்குப் பிடித்த வேறொரு பொருளைக் கொடுத்து அந்தப் புதிய பொருளில் பற்று உண்டாகும்படி செய்து விட்டு மற்றப் பொருளை மெதுவாக வாங்கி விடுகிறோம். குழந்தை புதிய பொருளில் லயித்துவிடுகிறது.

நமக்கெல்லாம் பற்றுக்கோடான ஸ்கந்தனின் பாதங்களை நாம் இறுகப் பற்றிக்கொண்டுவிட்டோமானால் ஏனைய பற்றுக்கள் இயல்பாகவே நம்மை விட்டு விலகிவிடுகின்றன. ஸ்கந்தப் பெருமானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுகப் பற்றிநின்று இனிய பாடல்கள் பல பாடியவர் அருணகிரிநாதர். அவரதுநூல்களுள் ஒன்று கந்தர் அலங்காரம்

அலங்காரம் என்றால் யாருக்குத் தான் பிடிக்காது? நம்மை நாமே அலங்கரிக்கின்றோம் நம் குழந்தைகளை விதவிதமாக அலங்கரிக்கின்றோம். வீடு வாசலை அலங்கரிக்கின்றோம். இப்படி கண்ணுக்கு ஸ்ஷணமான எதையும் அலங்கரிப்பதில் நமக்கெல்லாம் ஒரு மனத்திருப்தி. கருத்தைக் கவர்வதற்கு அலங்காரம் உதவுகிறது. உருவமற்ற கடவுளுக்கு உருவம் ஏற்படுத்தி அத்திருவுருவத்திற்கு ஒப்பனை செய்து மகிழும்போது அதில் நமது கண்கள் பதிகின்றன. கண்வழியே கருத்தும் பதிகின்றது. ஆண்டவனின் அழகிய திருவுருவத்தில் நமது கருத்துக்கள் பதியும் போது அந்தத் திருவுருவம் மறைந்து ஆண்டவனையே நாம் காணமுடிகின்றது.

இத்தகைய ஒருபக்குவமான உயர் நிலைக்கு நம்மைக் கொண்டுவர அலங்காரம் உதவுகிறது. நம் அருணகிரிப் பெருமானும் அலங்காரம் பண்ண விரும்பினார். ஆனால் அவர் சற்று வேறுபட்ட முறையில் அதைச் செய்திருக்கிறார். பூசலார் நாயனார் மனத்தாலே கோயில் கட்டி வழிபட்டதுபோல அருணகிரியார் வாக்கினாலே அலங்காரம் செய்திருக்கின்றார்.

மனம் வாக்குக் காயம் மூன்றினாலும் நாம் ஆண்டவனுக்குப் பணிசெய்யலாம். வாக்கிற்கு அருணகிரி எனப் பெயர்பெற்றவர் அல்லவா இந்தமுனிவர்? எனவே வாக்கினாலே - வார்த்தையாலே - சொல்மலர்களினாலே மாலை தொடுத்து அலங்கரிக்கின்றார். கந்தர் அலங்காரம் என்று அதற்குப் பெயரிட்டிருக்கிறார்

பேற்றைத் தவம்சற்றும் இல்லாத தனக்கு பிரபஞ்சம் என்ற சேற்றைக் கழித்துவிட முருகன் அருள் புரிந்த பெருமையைப் போற்றிப் பாடுகிறார் தாம் பாடுவது மட்டுமல்லாமல் நம்மையும் பாடும்படி கூறுகிறார்

பாடும் பணியே பணியாய் அருள்வாய் என்றார் கந்தரனுபூதியில். படிக்கும் திருப்புகழ் போற்றுவன் என்கிறார் கந்தர் அலங்காரத்தில். நாமும் அவரது பாடல்களைப் பாடிப்பாடி முருகப்பெருமானின் கருணையைப் பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபஞ்ச தத்துவம்

பிரபஞ்சமாகிய அண்ட சராசரங்களையெல்லாம் விளையாட்டாகவே படைத்துத் துடைக்கின்ற அந்தப் பேரருளாளன் முழுமுதற்கடவுளாகப் போற்றப் படுகின்றான். யாவற்றையும் கடந்து வெளியே நிற்கின்ற அதேநேரத்தில் யாவற்றினுள்ளேயும் கலந்துறைகின்ற அப்பொருமான் கடவுள் என அழைக்கப்படுகின்றார். பாச மலங்களிலே அழுந்திக் கிடக்கும் பசுக்களாகிய ஆன்ம கோடிகளைப் பக்குவப்படுத்தி மலபரிபாகம் செய்து ஆன்ம ஈடேற்றம் செய்வது அந்தப் பரம கருணாமூர்த்தியின் திருவருள். அதனால்தான் அவனைப் பதி என்று அழைக்கிறோம். பதியின் பாதங்களில் மனம் பதித்துப் பசுக்களாகிய ஆன்மாக்கள் பாசம் அகன்று பக்குவம் அடைகின்றன.

தாம் தாம் செய்த வினைப்பயன் யாவும் தாமே அனுபவிக்க வேண்டிய கடப்பாடுடையவர்கள் நாம். வினைப்பயன் வகை தெரிந்து விளைவின் வகையறிந்து ஊட்டும் உரிமையுடையவன் பசுபதி. நம்மீது கொண்ட நற்கருணை காரணமாக நல்வினைகளை நாடிச் செய்யும் நல்லறிவை அவன் எமக்குத் தந்தருள்கின்றான். தீவினை செய்தால் தீநெறி செல்ல நேருமென்ற திருந்திய அறிவை நமக்களித்து நம்மை நல்வழியில் நடத்தும் நாயகன் அவன். நமக்குத் தாயாய் தந்தையாய் உற்றமாய் சுற்றமாய் நட்பாய் நல்லறிவாய் நின்று வழிநடத்துபவன் அவன்.

பிறந்து பிறந்து பேரிடர்ச் சேற்றில் கிடந்து உழன்று உழன்று இறந்து இறந்து மீண்டும் பிறக்கும் எமக்குப் பிறவா வரம் தந்து பேரருள் தருபவன் அந்தச் சிவபரம்பொருள்தான். பிறப்பறுக்கும் பிஞ்ஞகனான அந்தப் பேரருளாளன், வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியன். பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனான பரம் பொருள் பேராது நின்ற பெருங்கருனைப்பேராறாக ஊற்றெடுத்துப் பாய்வது. காரண காரியமின்றியே கருணை கொள்ளும் பெரும் செல்வர் அவர். அவ்யாஜ கருணாமூர்த்தி (காரணமின்றியே கருணை செய்பவள்) என்று லலிதா சஹஸ்ரநாமம் துதிப்பது இந்தப் பரம் பொருளின் சத்தியையன்றோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமை பயக்கும் சர்க்கரையினுள்ளே மருந்தைப் பொதிந்து கொடுத்து நோய் தீர்க்கும் வைத்தியனைப்போல ஆன்மாக்களின் பிறவிப் பிணி தீர்க்கும் வைத்தியநாதனாகிய பரமசிவனும் சிற்றறிவினராகிய ஆன்மாக்கள் பூஜை உற்சவம் முதலிய கிரியைகள் மூலம் அந்தர்யாகபூஜையின் மேன்மை உணர்ந்து பரமஞானம் பெற்றுய்ய வைக்கின்றான். விறகிலே தீ போலவும் பாலிலே நெய் போலவும் மறைந்து நிற்கின்ற இறைவனை அன்பையே கோலாய் நாட்டி அறிவையே கயிறாய்க்கொண்டு கடையும்போது வெளிப்படுத்தலாம். இவ்வுடம்பையே கோயிலாகவும் மனத்தை ஆன்மாவாகவும் பாவித்து உள்ளத்து அன்பையே பாலாகவும் நெய்யாகவும் கொண்டு அபிஷேகம் செய்து வழிபடும் ஞானமார்க்கப் பூசையானது சிவதரிசனத்துக்குகந்த உயர்வழியாகும்.

பாசவினையின் வலியகற்றிப் பதியைச் சென்றடைகின்ற பசுவின் விளக்கமே மஹோற்சவமாகும். கொடித்துணியிலே எழுதப்பட்டிருக்கும் கொடிப்படமானது சீவான்மாவைக் குறிக்கும். கொடித்தம்பமானது பரமான்மாவாகிய பதியைக் குறிக்கும். கொடிமரத்திலே கொடிஏறிச் செல்வதற்குத் துணைபுரியும் மஞ்சட் கயிறே திருவருட்சக்தியாகும். தர்ப்பைக் கயிறு பாசமாகிய ஆணவாதிமலங்களைக் குறிக்கும் . மஹோற்சவத்திலே தொடர்ந்து நடைபெறும் கிரியைகள் யாவும் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் ஆகிய ஐந்தொழில்களின் விளக்கமாக அமைகின்றன. பஞ்சகிருத்தியங்களின்மூலம் ஆன்மகோடிகளைப் பக்குவப்படுத்தும் பரமான்மா மும்மலமாயை களைந்து முக்தி யளிக்கின்றது. ஆலயங்களில் நாம் காணும் நித்திய பூசைகள் முதல் மஹோற்சவம் வரையிலான கிரியைகளும் யோக ஞான வழியிலான மார்க்கங்களும் பரம்பொருளிடத்தில் நம்மை அழைத்துச் செல்லும் வழிகளே.

நாமும் எமது அறிவுக்கும் ஆற்றலுக்கு ஏற்றவகையில் இறைபணி செய்து அன்பும் அறமும் உடையோராய் நல்வாழ்க்கை வாழ்ந்து இன்பற்றிருப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கம் அறியா வழக்கம்

சைவசமயத்தின் பிரமாண நூல் எது? இக்கேள்விக்கு ஒரே சொல்லில் விடையளித்துவிட முடியாது. வேதம் எமது சமயத்தின் பொதுப்பிரமாண நூல். சிவாகமங்கள் நமது சிறப்புப் பிரமாண நூல்கள். இவையிரண்டினுள் மட்டும் நமது மதம் அடங்கி விடவில்லை. இந்த அடிப்படைநூல்களின் கருத்துக் கருவூலங்களை விளக்கும் இனிய நூல்கள் இன்னும் உண்டு

பகவத் கீதை, இதிஹாசங்கள் என்பனவும் நமது பிரமாண நூல்களே! இவையெல்லாம் மிகவும் உயர்ந்த தரத்திலுள்ள நூல்கள். சாதாரண பாமர மக்களிடம் இவை நெருங்கிச் செல்லவில்லை. அம்மக்கள் இவற்றை நோக்கிச் செல்லவும் இல்லை. இக் குறைபாட்டை நீக்குவதற்கும் சமயப் பெரியோர்கள் தோன்றினார்கள். இந்த ஞான நூல்களுக்கும் பாமரஜனங்களுக்கும் இடையில் தத்துவப் பாலங்களை உருவாக்கினார்கள். வேதாகமங்களிலே உள்ள மேலான உட்பொருள்களைப் பிழிந்தெடுத்துச் சாதாரண சமூகமட்டத்திலான கதை மரபு என்ற முலாம் பூசி மக்களுக்கு வழங்கினார்கள். இவைகளே புராணங்கள்.

இவைமட்டுமல்லாமல் தமிழ் வேதங்களான திருமுறைகளும் திருவாய்மொழிகளும் பல்வேறுபட்ட பிரார்த்தனை நூல்களும் உருவாக்கப்பட்டன. பாமர மக்கள் இறைவனது திருவருட் பெருமைகளையும் மத அநுட்டானங்களையும் சிறிது உணரத் தலைப்பட்டனர். காலப் போக்கில் மக்களின் வாழ்க்கை முறைகள் மாறுபட்டன. பல்வேறு துறைகளில் அவர்களின் நாட்டம் கலைந்து செல்கின்ற காரணத்தால் மத ஆராய்ச்சிகளில் அவர்களின் நாட்டம் குறைந்தது. வேதாகமங்கள் பற்றிய சிந்தனைகள் மிகவும் அருகி அவற்றின் வழிநூல்களை மட்டும் மேலோட்டமாகப் படித்தறிவதில் நின்றனர் மக்கள்.

இங்குதான் நமது மதத்தின் வளர்ச்சிக்குப் பாதகமான நடைமுறைகள் ஆரம்பமாகின. புராணக்கதைகள் முதலியவற்றை மேலோட்டமான முறையில் படித்த மக்கள் அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவார்த்தங்களையோ உட்பொருட்களையோ உணர முற்படவில்லை. புராணங்கள் சொல்லும் கதைகளே நமது சமய அடிப்படை உண்மைகள் என்று நம்பத் தலைப்பட்டார்கள். இன்னொருபுறத்தில் மரபுரீதியாகச் சமய அடிப்படையில் வழங்கி வந்த சில நடைமுறைகள் சட்டதிட்டங்கள் கொள்கைகளை அப்படியே கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றினரேயன்றி அவற்றுக்கான காரண காரியங்களையும் வரலாற்றுண்மைகளையும் புரிந்துகொள்ள முற்படவில்லை.

இங்கு ஒரு கதையைக் கூறுவது பொருத்தமாக இருக்கும். ஒருவன் தனது பாட்டனாரின் திவச நாளிலே தந்தையார் ஒரு பூனையைக் கட்டி வைப்பதைக் கண்டிருக்கின்றார். தந்தையார் இறந்தபின் அவரது திவசம் நடக்கும்போது அவன் வீட்டில் நின்ற பூனையத் தேடினான். காணவில்லை. ஊர்முழுவதும் தேடி ஒரு பூனையைக் கொண்டுவந்து கட்டி வைத்துவிட்டுத் திவசம் செய்கிறான். வீட்டிலே வளர்க்கப்படும் பூனை திவசத்திற்குரிய பொருட்களை அசுத்தம் செய்துவிடுமென்ற காரணத்தால் தந்தை பூனையைக் கட்டிவைத்தார். மகன் அதற்குரிய காரணத்தை ஆராய முற்படவில்லை. பூனை கட்டி வைப்பதும் திவசக் கிரியைகளில் ஒன்று என எண்ணிவிடுகிறான்.

இதேபோலத்தான் விளக்கம் அறியாத வழக்கங்கள் பலவற்றைக் கைக்கொள்கிறார்கள் மக்கள். இவற்றையும் நமது புராணக் கதைகளில் இடம் பெறும் பொருத்தமற்ற சில சம்பவங்களையும் பிற மதத்தவர்கள் கேலி செய்யும்போது நம்மவர்கள் கூனிக் குறுகிவிடுகின்றனர். மரபு ரீதியான நமது சமயச்சடங்குகளிலும் புராண இதிஹாசக் கதைகளிலும் அடங்கியுள்ள தத்துவ உட்பொருள்களை நாம் நன்கு புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். இவற்றை நாமும் புரிந்துகொள்வதுடன் நம்மைக் கேலிசெய்யும் பிற மதத்தவர்களுக்கும் எடுத்துச் சொல்லத் துணிந்தால் நமது சமயம் நன்கு முன்னேறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமுன் காப்போம்

நமது எதிர்கால நன்மைகருதி நாம் வங்கிகளில் சேமிப்புக்களை ஏற்படுத்திக் கொள்கிறோம். நமது வாழ்க்கை எப்போது முடிவுறும் என்பது நமக்குத் தெரியாது. அதனால் நம்மைக் காப்புறுதி செய்து கொள்ளவும் தவறுவதில்லை. லௌகீக ரீதியில் இப்படியெல்லாம் செய்கின்ற நாம் ஆன்மீக ரீதியில் நமக்காக என்ன பாதுகாப்புச் செய்து கொள்ளப் போகிறோம். திடீரென்று எங்கள்முன் ஒருநாள் வந்து நிற்பான் காலன். அப்போது எதுவும் செய்வதற்கு முடியாது. எனவேதான் இப்போதே புண்ணியத்தைச் சேமித்து வைக்கத் தொடங்கவேண்டுமென வலியுறுத்துகின்றனர் பெரியோர். "அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன்" என்று ஆண்டவனிடம் சொல்லி வைக்கின்றார் ஆழ்வார்.

முருகன் அடியவரான அருணகிரி நாதரும் இதை மறக்கவில்லை. முருகா நான் தினந்தோறும் உனது திருப்புகழ் படிப்பேன். என்னைக் கொண்டுபோக யமன் வரும்போது அஞ்சல் என்று நீ காத்தருள வேண்டும் என்கிறார்.

"படிக்கும் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினால்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சல் என்பாய்"

என்பது அவர் பாடல்.

ஒருசமயம் அருணகிரியார் ஆலயக் கோபுரத்தில் ஏறிநின்று கீழே குதித்தார். தான் செய்த தவறுகளை உணர்ந்து வாழ்க்கையை வெறுத்துத் தற்கொலை செய்வதற்காக. அனால் கூற்றுவன் வந்து பாசத்தினால் பிடிக்கவில்லை. அவர் விழுந்தது பட்டுமெத்தையில். அயில் வேலன் திருக்கரமாகிய பட்டுமெத்தையில் விழுந்தார். கூற்றுவன் வரமுன்பு வேலன் வந்து ஆண்டுகொண்டார். இந்த அனுபவத்தினால்தான் மறு தரமும் அப்படியே காத்தருள வேண்டுமெனக் கேட்கிறார். எமக்கும் அறிவுரை கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்துப் பிறக்கவொட்டா அயில் வேலன் கவியைஅன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர் எரிமுண்டதென்ன
விழித்துப் புகைஎழப் பொங்குவெங் கூற்றன் விடும் கயிற்றால்
கழுத்தில் சுருக்கிட்டிழுக்கும் அன்றோ கவி கற்கின்றதே?

இது ஓர் அற்புதமான பாடல். எதையும் நாளை நாளை என்று ஒத்திப் போடுகின்ற நமக்கெல்லாம் இது ஒரு நல்ல பாடம்.

கொடும் தீயென விழித்துப் பொங்கிய வண்ணம் கூற்றன் வரப் போகிறான். வந்து கயிற்றால் கழுத்தில் சுருக்கிட்டு இழுக்கின்ற போதிலா நீங்கள் வேலனின் பாடல்களைப் படிக்கப் போகின்றீர்கள்? இப்போதே அயில் வேலன் கவியை அன்பாகப் படிமின்கள் என்கிறார் அருணகிரியார். அன்போடு பாடவேண்டும் என்பது அவர்விருப்பு. "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து......." என்கிறார் மணிவாசகர் பாடுகின்ற பாட்டின் பொருளை அறிந்து அன்பால் கசிந்துருகிப் பாடவேண்டும்.

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான் கலந்து பாடும் கால்"

என்கிறார் திருவருட்பிரகாச வள்ளலார்.

பாடல் வேறு நாம் வேறு என்றில்லாமல் பாடலோடு - பாட்டின் பொருளோடு - பாடலின் பண்ணோடு கலந்து நின்று பாடவேண்டும். இன்னொரு முக்கிய விஷயத்தைக் கூறுகிறார். எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர். வார்த்தைகள் எழுத்துக்கள் அவற்றின் ஓசைகள் இவற்றுக் கெல்லாம் மாபெரும் சக்தியுண்டு. இது விஞ்ஞான பூர்வமாக நிரூபணமான ஒன்று. அந்தந்த ஓசைகள் வார்த்தைகள் என்பன பிழைபடாமல் பாடவேண்டியது அவசியம். எனவே, நாமும் இப்போதே அயில் வேலன் கவியை எழுத்துப் பிழையறக் கற்று அன்போடு பொருளுணர்ந்து பாடும் பணியே பணியாகக் கொண்டு கூற்றுவன் வந்து பாசக் கயிற்றை வீசுமுன்னர் நமக்கொரு பாதுகாப்பைத் தேடிக் கொள்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்கின்றோம், தேயவில்லை.

முன் எப்போதுமில்லாத அளவு இப்போது இந்துமதம் பல்வேறு விதமாகத் தாக்குதலுக்கள்ளாகிறது.

ஏனென்றால்..........

முன்னெப்போதும் இல்லாத அளவு இப்போது இந்துமதம் வளர்ந்து வருகிறது. காய்த்த மரம்தான் கல்லெறி படும். அவ்வாறே, வளம்பெற்று வளர்கின்ற நமது மதத்தையும் பலர் அண்ணாந்து பார்க்கின்றனர்.

11463 - S.C

வித்தூன்றி விளைவித்த பெரியோரும்-
பற்றோடு பக்கத்தில் நின்று காத்து வளர்த்த தொண்டர்களும்-
பசளையும் நீரும் பாய்ச்சி வளர்த்த ஞானிகளும்-
இன்று இல்லை.

என்றாலும் இந்துமதம் வாழ்கின்றது, வளர்கின்றது.

இங்கு கூறியதுகூட ஓர் உருவகம்தான். இந்துமதம் தோன்றவுமில்லை. வளரவுமில்லை. அது என்றும் உள்ளது. நாம் அதனை உணர்ந்துகொண்டோம். அவ்வளவுதான்.

பெரியதொரு மாளிகையாக விளங்கும் இந்துசமயப் பாரம்பரிய மரபுவழிப் பெருமைகளும் சமயாசாரச் சடங்குகளும் கிரியைகளும் வழிபாட்டுமுறைகளும் எம்மை வாழ்விக்கின்றன. நாம் அதில் வாழ்கின்றோம்.

ஆனால் நம்மில்பலர் "இந்து" மாளிகைக்குள் நுழைந்து பார்ப்பதில்லை. தாழ்வாரத்திலேயே வாழ்கின்றோம். அதனால் அங்கு என்ன இருக்கிறது என்று உணர்வதில்லை.

அதனால் கல்லெறி விழும்போது நம்மீதும் விழுகிறது. வீட்டிற்கு எறியப்படும் கல் புறத்தே நிற்பவர்மீது விழத்தானே செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமொரு பேருண்மை.........

வெளியிலிருந்துமட்டும் கல் எறியப்படவில்லை.

நன்கு அவதானித்துப் பார்த்தால், நம்மவர்களுக்குள்ளேயிருந்தும் கல் வீசப்படுகிறது. உண்மையில் அவைதான் ஆபத்தான முறையில் நம்மீது வீழ்கின்றன.

கவலைப்படத்தேவையில்லை.

கோபப்படவும் தேவையில்லை.

எறியப்படும் எல்லாக் கற்களையும் நிதானமாகப் பொறுக்கி எடுத்து வைத்தால் மாளிகையை வளம்படுத்திக் கட்டி எழுப்பலாம்.

அதேநேரத்தில் "இந்து" மாளிகைக்குள் நுழைந்து எங்கள் சமய உண்மைகள், தத்துவப் பொலிவுகள் இவற்றின் விளக்கங்களையும் சிறிது உணர்ந்து எமது அகத்தினுள்ளேயும் தீபமேற்றி வைப்போம்.

தர்மக்கொடியாகிய நந்திக் கொடியை ஏற்றிவைப்போம். இந்துவாக வாழ்வோம். இந்து தர்மம் காப்போம். தர்மத்தின் வழியில் சமாதானம் காண்போம்.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்"
- திருநாவுக்கரசு சுவாமிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆள் பாதி, ஆடை பாதி

இந்துசமயத்தின் சிறப்புக்களில் ஒன்று விழாக்களும் பண்டிகைகளும் நிறைந்திருப்பது. "குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே"

தத்துவங்கள் வரட்டுத் தத்துவமாக இல்லாமல் சமயநெறியாகி வாழ்க்கையின் பாதையாகவேண்டும்.

சமய வழிபாடு கொண்டாட்டங்களாகி மக்களோடு இணைந்து மகிழ்வூட்ட வேண்டும்.

நமது இந்துசமய ஞானிகள் இதைத்தான் செய்திருக்கிறார்கள்.

சமய நெறியும் வழிபாட்டுமுறையும் நமக்குச் சுமையாக இருக்கக்கூடாது. சுகமாக இருக்கவேண்டும்.

"வெளிவேஷங்கள் எதற்கு? உள்ளத்தால் இறைவனை வழிபட்டால் போதாதா?" என்பார்கள் சிலர். ஞான நிலையில் அது சரி. ஆனால் நமது நிலையில் அது பொருந்தாது.

சீருடையும் முரசொலியும் போருக்கு எதற்கு? ஆயுதம் மட்டும் போதாதா? கையில் ஆயுதமும் உள்ளத்தில் வீரமும் சேரும்போது உணர்வை உரமாக்கி ஊக்கப்படுத்தச் சீருடையும் முரசொலியும் பயன்படுகின்றன.

அதுபோல அகத்தை ஆண்டவன்பால் நாடச்செய்ய அலங்காரங்களும் அரிய வாசனைகளும் ஆடல் பாடல்களும் கொண்டாட்டங்களும் துணைசெய்கின்றன. "ஆள் பாதி. ஆடை பாதி" என்று இதைத்தான் சொல்வார்கள்.

இந்த நல்ல கருத்தை நாம் உணரும் அதே நேரத்தில் இன்னொன்றையும் மறந்துவிடக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடையில்லாமல் ஆளுக்கு மதிப்பில்லை. இடத்துக்கும் தகுதிக்கும் ஏற்ற ஆடைதான் ஆளுக்குத் தகுந்த மதிப்பைக் கொடுக்கும். ஆனால்..................

நாம் நன்கு கவனிக்க வேண்டிய உண்மை - ஆடைமட்டும் ஆள் ஆகமுடியாது.

இன்று பல இடங்களில் சடங்குகளும் வெளி வேஷங்களும் மிகுந்த முக்கியத்துவம் பெறுமளவு உள்ளார்ந்த சமய வழிபாட்டு நெறிமுறைகள் கவனிக்கப்படாமல் மழுங்கிப்போகின்றன.

நாம் நமது சமய தத்துவ உண்மை என்ற அடிநாதத்தை மறந்துவிடாமல் இருக்கவேண்டும்.

இந்துவாக இருக்க வேண்டாம். இந்துவாகவே வாழவேண்டும்.

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை"
- திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PROF. V. SIVASAMI
UNIVERSITY OF JAFFNA

# தர்மத்தில் இலகுவழி

இந்து தர்மம் காப்போம் என்கின்றோமே, தர்மம் என்பது என்ன? அதை எவ்வாறு காப்பது?

தர்மம் என்றதும் "ஐயா தருமம் தாங்க" என்ற குரல் காதில் விழுகிறது.

தர்மம் என்பது தானமா?

தர்மம் என்பது தானம் அன்று. அது தானத்தைவிடப் பெரியது. ஆனால் தானம் என்பது தர்மத்தில் உள்ளது. தானம் என்பது தர்மத்தின் முக்கியமான ஓர் அம்சம்.

தர்மம் என்பது வாழ்க்கைநெறி. நாம் நமது வழியில் நடந்தால் அதுதான் தர்மம். மற்றவர்களின் வழிக்கு நாம் போகத் தேவையில்லை. மற்றவர்களும் நமது வழிக்கு வரவேண்டிய அவசியமில்லை.

அவரவர்க்குரிய பாதை அவரவர் தர்மம். தனது கடமையைச் செய்யாமலிருப்பது பெரிய குற்றம். அதைவிடப் பெரிய குற்றம் மற்றவர் கடமையைத் தான் செய்ய முற்படுவது. இது கீதை காட்டும் பாதை.

நமது தர்மநெறியில் நாம் நடப்பது என்பது நம் முன்னோர் காட்டிய நல்வழியை அனுசரிப்பதுதான். பாரம்பரியம் என்றும் மரபுமுறை என்றும் இந்துக்களால் பேணப்பட்டுவருவது இதுதான்.

தர்மத்தில் சிறந்தது தானம் என்றோம். தானம் என்பது எது? வாரியிறைப்பதுதான் வள்ளன்மையா? இல்லை. வளத்துக்கேற்பவும் வருபவர் தேவைக்கேற்பவும் வழங்குவதுதான் வள்ளன்மை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்" என்று பாரதியார் பாடியது இந்த தர்மநெறியைத்தான். இதையே மூவாயிரம் பாடல் பாடிய மூத்த முனிவர் முதலிலேயே முத்தாகக் கூறிவிட்டார். தர்மம் காத்தல் என்ற பெரும் பணியை இலகுவாக்கித் தருகிறார்.

"யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே"

ஆயிரம் சங்கு வைத்து அபிஷேகம் செய்வதுதான் இறைவழிபாடு அன்று. அதற்கு வசதி உள்ளவர்கள் அதனைச் செய்யட்டும். இயலாதவர்கள் ஒரேயொரு பத்திரத்தை(வில்வம்) இறைபதத்தில் சமர்ப்பித்தால் அதுவும் மேலான வழிபாடுதான்.

"நீ எதைக் கொடுக்கிறாய் என்பது பெரிதன்று. எப்படிக் கொடுக்கிறாய் என்பதே பெரிது" -என்கிறார் சுவாமி சிவானந்தர்.

ஜீவகாருண்யம் என்பது என்ன? பசுவுக்கு ஒருவாய் உணவு கொடுப்பதே மேலான தர்மம்தான். நாம் உண்ணும் உணவில் ஒரு கைப்பிடியை ஏழை ஒருவனுக்கு கொடுப்பது யாவருக்கும் இயலக்கூடிய ஒன்றல்லவா?

எல்லாவற்றையும் விடச் சிறந்த அறம் உண்டு. இனிய வார்த்தை. "இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று" என்கிறார் தெய்வப் புலவர்.

"யாவர்க்கமாம் பிறர்க் கின்னுரை" என்கிறார் திருமூலர்.

நாம் எடுக்கவேண்டிய முக்கிய தீர்மானங்களுள் ஒன்று. பிறர்மனத்தை நோகடிக்காமல் வாழப் பழகுவோம். இனிய வார்த்தைகளையே பேசுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சனை

ஆலயம் செல்லும்போது வெறுங்கையோடு போகக்கூடாது. கையுறையாகப் பூவோ பழமோ பாலோ கொண்டுபோக வேண்டும். வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், கற்பூரம் இவற்றையும் அர்ச்சனைப் பொருளாகக் கொண்டுபோகிறோம். இறைவனுக்கு அர்ப்பணம் செய்து அவனை அர்ச்சிப்பதற்காகக் கொண்டுபோகின்ற இப்பொருட்கள் புனிதமானவை. அதற்குரிய பவித்திரம் பேணப்படவேண்டும்.

தூய்மையாகத் துலக்கிய தட்டிலே இவற்றை அழகாக அடுக்கிவைத்து இருகரங்களாலும் தாங்கி இடுப்புக்குமேலே உயர்த்தி மார்போடு சேர்த்துக்கொண்டு போகிறோம். எங்கள் இதயம் அந்த அர்ச்சனைத் தட்டில் இருக்கிறது.

வெள்ளையுள்ளமும் விரும்பும் இனிமையும் எங்கள் உள்ளத்தில் இருக்கின்றன. வெளியே அவற்றைத் தெரியவிடாமல் ஆணவமாகிய அறியாமை இருள் மறைத்திருக்கிறது. இறைவன் சந்நிதியில் புறஇருள் நீங்கி அகவொளி பளிச்சிடும். வலிய துன்பம் விலகினால் மென்மையான இன்பம் தலைகாட்டும். அதனைக் காட்டத்தான் தேங்காய் அர்ச்சனைத் தட்டில் இடம்பெறுகிறது.

கனிந்த பழங்களைக் காணிக்கையாக்குகிறோம். எமது கருணை நிறைந்த கனிந்த உள்ளத்தை ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்வதற்காக.

மலர்ந்து மணம் வீசும் மலர்கள் அவன் பாதங்களைச் சென்றடைவதற்காகத் தட்டிலே காத்திருக்கின்றன. எமது உள்ளங்களும் மலர்ந்து மணம் வீசவேண்டும். எமது வாழ்க்கையும்தான்.

வெற்றிலை பாக்கு இலட்சுமீகரம். செல்வப்பேறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய தத்துவ உட்பொருளும் புனிதச் சிறப்பும்மிக்க அர்ச்சனைப் பொருள் விரிந்த தட்டில் விளங்கித் தெரிவதற்குப் பதிலாக இன்று "சொப்பிங் பை" என்ற நவீன சாதனத்தில் ஒன்றாகக் குவிந்து குமைந்து குழம்பிக் கிடக்கிறது. ஆலயம் செல்வோர் தமது வசதிகருதி அந்தப் பையில் அனைத்தையும் வைத்து ஒற்றைக்கையிலே தொங்கவிட்டு முழங்காலுக்கும் கீழே ஆடிக்கொண்டிருக்கும் வகையில் கொண்டுபோகும்போது அர்ச்சனை என்பதன் அர்த்தமே இல்லாமல் போய்விடுகிறது.

ஆலயம் சென்று வழிபடும்போதும் வழிபாட்டு முறைகள் எதுவும் தெரியாமல் மனம்போனபடி வழிபாடுசெய்கிறார்கள் பலர். ஆலயங்களில் அமைந்திருக்கும் வாசற்படிகள் தெய்வீகமானவை. புனிதம் மிக்கவை. அவற்றில் கற்பூரம் ஏற்றி வழிபடுவோர் பலர். இது ஆலயத்தின் தூய்மை, அழகு என்பவற்றையும் கெடுத்து விடுகின்றன. அதற்கென்று அமைக்கப்பட்ட இடங்களில் கற்பூரம் ஏற்றி வழிபடலாமே.

விழ்ந்து வணங்குதல் என்பது மிக முக்கியமான வழிபாட்டு முறை. வடக்கு அல்லது கிழக்குத் திசையில் மட்டும் தலைவைத்து ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்யவேண்டுமென்பது விதி. இவ்வாறு வணங்கும்போதும் காற்புறத்திலே ஏதாவது சுவாமி சந்நிதிகள் இடம்பெறுமானால் வீழ்ந்து வணங்குவதைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்று கூறப்படுகிறது. இவற்றை உணராமல் விரும்பிய திசையில் விரும்பியவாறு விழ்ந்து வணங்கும் பலரை இன்று ஆலயங்களில் காணமுடிகிறது.

நமது சமய மரபுகளையும் அவற்றின் தத்துவார்த்த உட்பொருள்களையும் ஆராய்ந்து அறிந்து சிந்தித்துத் தெளிவடைந்து நடைமுறையில் பயன்கொண்டு உய்திபெறுவோம்.

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையாலே பலி தேரும் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திர மோகமும் வடமொழித் துவேஷமும்

மந்திரம் என்பது நினைப்பவரைக் காப்பது. பிரார்த்தனை, பூஜை முதலியவற்றிலும் மாந்திரீக விடயங்களிலும் மந்திரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

சமய நம்பிக்கையுடைய பலருக்கும் மந்திரங்களில் பெருவிருப்பு ஏற்படுதல் இயல்பானதே. ஒவ்வொருவரும் தத்தமக்குப் பிடித்தமான மந்திரங்களை மனனம் செய்து ஓதிவருகின்றனர்.

*இம்மந்திரங்கள்மீது இக்காலத்தில் சாதாரண மக்கள் பலருக்கு அடங்காத மோகம் ஏற்பட்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. பக்தியும் விருப்பமும் உண்டாவதும் அதற்கேற்பத் தம்மைத் தகுதியுடையவர்களாக ஆக்கிக்கொண்டு மந்திரம் ஓதுவதும் தவறானதன்று. ஆனால் தகுதியற்றவர்கள் தவறான முறையில் மோகம் கொள்வதே இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது.*

அதாவது , மந்திரங்கள் உயர்சக்தி வாய்ந்தவை. "தெய்வங்கள் மந்திரங்களுக்குள் அடக்கம்" எனறு மஹா விஷ்ணுவே கூறியிருக்கிறார். அதனால், தெய்வங்களை எவ்வளவு பயபக்தியோடு போற்றுகின்றோமோ அவ்வளவு பயபக்தியோடு மந்திரங்களையும் பேணவேண்டும். இங்கு பக்தி என்ற சொல்லுடன் பயம் என்ற சொல்லும் இருப்பது கவனிக்கத்தக்கது.

இன்று மந்திரங்களை ஓதும் பலரிடம் பயம் மட்டுமல்லாமல் பக்தியும் மதிப்பும்கூட இருப்பதில்லை. சர்வ அலட்சியமாக வாய்க்கு வந்தபடி ஓதுகிறார்கள். ஒரு யாகமந்திரத்தின் உச்சரிப்புத் தவறு காரணமாக பயங்கரமான ஆட்டுக்கடா ஒன்று தோன்றி யாவற்றையும் அழித்த கதை புராணங்களில் உண்டு. மந்திரங்களின் பயன்பாட்டில் உச்சாரணம் மிக முக்கியம். அக்ஷர சுத்தமாக உச்சரிக்கப்பட வேண்டும். வடமொழி மந்திரங்களைச் சரியாக உச்சரிக்க வடமொழி அறிவும் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, மந்திர சித்திக்குக் குருவருள் அவசியம். குருவின் உபதேசமும் தீக்ஷையும்தான் எந்த வழிபாட்டுக்கும் முதற்படி. ஆசாரம் ஒழுக்கம் தூய்மை என்பன அதற்கு அடுத்த படி. இவை இல்லாதவர்கள் மந்திரமோதுவது மஹா பாவம். சமயதீக்ஷை பெறாதவர்கள் தேவாரம் ஓதுவதே தகாது என்கிறார் நாவலர். இன்று பலர் சமய தீக்ஷையும் இல்லாமல், வடமொழி அறிவு கொஞ்சமும் இல்லாமல், குருமூலமான உபதேசம் எதுவுமில்லாமல் மாமிச போசனமும் அருந்திவிட்டு **காயத்திரி மந்திரம், திரியம்பக மந்திரம்** முதலிய மஹாமந்திரங்களை அநேக உச்சரிப்புப் பிழைகளுடன் பகிரங்கமாக ஓதிவருகிறார்கள். இது அவர்களுக்குமட்டுமன்றி உலக நன்மைக்கே பாதகமாகும்.

இது ஒருபுறம் இருக்க, மறுதலையாக வடமொழித் துவேஷம் இன்னொருபுறத்தில் காணப்படுகிறது. ஆரியமும் செந்தமிழும் தனது இரு கண்களாகக் கொண்டவன் சிவபிரான் என்று தேவார திருவாசகங்கள் உரைக்கின்றன. தமிழ் எங்கள் தாய்மொழி. வடமொழி எங்கள் தந்தைமொழி. எனவே வடமொழியை வெறுக்காது அதனைக் கற்றுக் கொள்ள யாவரும் முன்வர வேண்டும். அதன்மூலம் மந்திரங்களைச் சரியானபடி உணர்ந்து உச்சரிக்க முடியும்.

மேலும், தகுதிக்கு மீறிய ஆசைகளை விடுத்து தமிழ்மந்திரங்களாகிய திருமுறைகளை பயபக்தியோடு ஓதிவருவோமானால் எத்துணை பயன் பெறலாம். சைவத் திருமுறைப் பாடல்கள் அளவற்ற சக்தி வாய்ந்தவை. மந்திரங்களுக்கு இணையானவை. அவற்றை மறந்துவிடக் கூடாது. கிரக பீடைகள் நீங்க “வேயுறு தோளி பங்கன்”, நோய் - பிணி - துன்பம் போக “இடரினும் தளரினும்” என்று ஒவ்வொரு தேவைகளுக்கும் உரிய தேவாரப் பதிகங்களை ஆன்றோர் வகுத்துத் தந்துள்ளனர்.

எனவே மந்திர மோகத்தைப் போக்கித் தமிழ் மறையைப் பேணுவோம். அதே நேரத்தில், வடமொழித் துவேஷத்தைப் போக்கி, அம்மொழியைக் கற்றுணர்ந்து தீக்ஷை பெற்றுக் குருவின் உபதேசத்துடன் சுத்த சைவராகி மந்திரங்களையும் போற்ற முன்வருவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓலமிடும் ஒலிபெருக்கிகள்

மருத்துவக்கல்வி கற்பதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுத் தங்குவதற்கு விடுதி தேடிக்கொண்டிருந்த சில மாணவர்களுக்கு அறிவும் அனுபவமும் மிக்க சிலரால் வழங்கப்பட்ட உபதேசம் இது.

"எவ்வளவு வசதி உள்ள விடுதியாயிருந்தாலும் இந்து ஆலயத்துக்குப் பக்கத்தில் இடம் எடுக்கவேண்டாம்"

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்", கோபுர தரிசனம் கோடி புண்ணியம்", ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றெல்லாம் நமது முன்னோர்கள் சொல்லிவைத்திருக்கையில் இவ்வறான பொன்மொழி தோன்றக் காரணமென்ன?

இவ்வாறு உபதேசித்தவர்கள் வேற்று மதத்தவர்களா? அல்லது நாஸ்திகர்களா? இல்லை!இல்லை! அவர்கள் உண்மையான இந்துக்கள்.

இன்று நமது ஆலயங்கள் அமைதிபேணும் வழிபாட்டுத் தலங்களாக இல்லாமல் ஒலிபரப்பு நிலையங்களாக மாறிவிட்ட படியால்தான் இப்படியான ஒரு அறிவுரை தோன்றியது. இந்துக் கோவில்களில் எந்தக் காலமும் விழாக்கள் இருக்கும். விழா ஒன்று பூரணம் பெறவேண்டுமானால் ஒலிபெருக்கிகள் ஓலமிடவேண்டும். இது இன்றைய நியதி. எனவே மருத்துவக்கல்வி கற்கும் மாணவன் ஒருவன் அருகிலிந்து மனம் ஒருமித்துப் படிக்க முடியுமா? எனவே அந்த அறிவுரை நியாயமானதல்லவா?

இந்த விடயத்தில் பத்திரிகைகளில் பலரும் பல தடவைகள் எழுதி எழுதி அலுத்துவிட்டார்கள். துன்பங்களைப் போக்கி மன அமைதியைத் தேட ஆலயம் சென்றால் அங்கு ஓலமிடும் ஒலிபெருக்கிகள் இன்னும் தலைவலியை அதிகரிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டின்போது திருமுறை ஓதுங்கள் என்பது முன்னோர் அறிவுரை. அவ்வாறு திருமுறை ஓதமுற்பட்டால் எமது குரல் எமக்கே கேட்கவிடாமல் - அடுத்த வசனம் என்பது நினைவுக்கு வரவிடாமல் ஒலிபெருக்கியில் ஒலிக்கும் பக்திப் பாடல்கள் குழப்புகின்றன.

ஒலிபெருக்கியின் தேவையும் ஆலயங்களில் உண்டு என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் அதிகாலை நான்கு மணியிலிருந்து இரவு பத்து மணிவரை ஒலிபெருக்கித்தான் உற்சவம் நடத்தவேண்டுமா? ஒலிபெருக்கி பயன்படுத்தும் நேரங்கள் மட்டுப்படுத்தப்படவேண்டும்.

அதேபோல ஒலிபெருக்கியின் ஓசையும் மட்டுப்படுத்தப்பட வேண்டும். ஆலய வளாகத்தில் மட்டும் அந்த ஓசை ஒலிக்குமானால் அதில் தவறில்லை.

"வாழு. வாழவிடு" என்ற உயர் தத்துவம் உண்மையான இந்துவின் உள்ளத்தில் என்றும் அடிநாதமாக இருக்கவேண்டும். பிறருக்கு இடைஞ்சல் செய்பவன் உண்மைச் சமயி ஆகான்.

ஆலயங்களுக்கு மட்டும் இந்தக் கருத்து உரியதல்ல. வைபவங்கள் எதுவாக இருந்தாலும் ஒலிபெருக்கியை நாம் பயன்படுத்தும்போது இதைக் கவனத்தில் கொண்டால் எவ்வளவு நல்லது!

முன்பு ஒரு இந்து மாநாட்டிலே இந்த விடயம் தீர்மானமாக எடுக்கப்பட்டது. ஆனால் கைக்கொள்ளப்படவில்லை. ஒலிபெருக்கிகள் மூலம் பிறருக்கு இடைஞ்சல் செய்வதை இந்துசமய விழாக்களில் இனிமேல் தவிர்த்துக்கொள்வோம். ஆலயங்களுக்கு அருகில் இருந்தால் அமைதியாக வாழலாம் என்ற நம்பிக்கை எமது மக்களிடையே வளர வகைசெய்வோம். முக்கியமாக ஆலய பரிபாலனசபைகள், ஆலய நிர்வாகிகள் உள்ளங்களில் இந்த உரத்த சிந்தனை வலுப்பெறட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடு

எங்கும் வியாபித்திருக்கும் ஆண்டவனை மன ஒருமைப் பாட்டுடன் வழிபாடியற்றி அவனருள் பெற உகந்த இடம் ஆலயம். ஆலய வழிபாட்டிற்கென சில விதிமுறைகள் உள்ளன. வழிபடும் முறைகள் தெரியாமல் தவறுகள் செய்வோர் பலர். சுருக்கமாக அதனைத் தெரிந்துகொள்வோமா?

ஸ்நானம் செய்து தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து விபூதி தரித்துக் கொண்டு சிவ சிந்தனையுடன் ஆலயம் செல்ல வேண்டும். வீதியில் கைகால்களைக் கழுவிச் சுத்தம் செய்தபின் கோபுரத்தை நமஸ்காரம் செய்தவாறு உள்ளே நுழைந்து பலிபீடத்திற்கு இப்பால் வடக்கே தலைவைத்து வீழ்ந்து வணங்குதல் வேண்டும்.

வடக்கு நோக்கிய சந்நிதியாயின் கிழக்கே தலைவைத்து நமஸ்காரம் செய்தல் முறை. எவ்வாறாயினும் வடக்கிலும், கிழக்கிலும் கால்நீட்டி வணங்குதல் தகாது. பரிவார தெய்வங்களின் சந்நிதிகள் உள்ள திசைகளில் கால்நீட்டுதலும் தவிர்க்கப்பட வேண்டும்.

ஆண்கள் தலை, கையிரண்டு, செவியிரண்டு, வாய், புயங்கள் இரண்டு என்னும் எட்டு உறுப்புக்களும் நிலத்தில் படியும்படியாக அஷ்டாங்க நமஸ்காரமும், பெண்கள் தலை, கையிரண்டு, முழந்தாளி ரண்டு என்னும் ஐந்து உறுப்புக்களும் நிலத்தில் பொருந்தப் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.

மார்பு பூமியில் படும்படி வலக்கையை முன்னும், இடக்கையைப் பின்னும் நேரே நீட்டிப் பின் அம்முறையே மடக்கி, வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தக் கைகளை அரையை நோக்கி நீட்டி வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்து வணங்குதலே அஷ்டாங்க நமஸ்காரமாகும்.

இதன்பின் வீதி வலம்வரும்போது சிரசிலாவது மார்பிலாவது இரு கரங்களையும் குவித்துச் சிவநாமங்களையுச்சரித்தவாறு மெல்ல அடியெடுத்து வைத்து நடக்க வேண்டும். விநாயகரை ஒருதரமும், சூரியனை இருதரமும், அம்பிகையையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷ்ணுவையும் நான்கு தரமும் வலம்வருதல் முறை.

விநாயகரை வணங்கும்போது முஷ்டியாகப் பிடித்த கைகளினால் நெற்றியில் மும்முறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும், இடக்காதை வலய்கையினாலும் மாறிப் பிடித்து மும்முறை தாழ்ந்தெழுந்து (தோப்புக்கரணம்) வணங்கவேண்டும்.

அபிஷேகம், நைவேத்தியம் என்பன நிகழும்போது சுவாமிதரிசனம் செய்வதும், வீழ்ந்து வணங்குவதும், வீதிவலம் வருவதும் தகாது. தீபாராதனை நிகழும்போது வீழ்ந்து வணங்குவதும் முறையன்று. வீதிவலம் வரும் ஒவ்வொரு தரமும் சண்டேஸ்வரரை வழிபடாது (கைகொட்டுதல் மூலம் அவரது தவத்துக்கு இடையூறு செய்யாமல்) இறுதியாக வலம்வரும்போது மாத்திரம் அவரை வணங்கி வழிபாட்டின் பலனைத் தரும்படி கேட்டு மும்முறை மெல்லக் கைகொட்டி வணங்க வேண்டும்.

சண்டேஸ்வரரை வலம்வந்து வணங்குவது கூடாது. ஏனெனில் மூலஸ்தானத்திற்கும் சண்டேஸ்வரருக்குமிடையே குறுக்கே போகக்கூடாது என்பது விதி. இதேபோல நந்திக்கும் மூலஸ்தானத்திற்குமிடையே குறுக்கே போவதும் தகாது.

இதன்பின் நந்தியை வணங்கி அநுமதிபெற்று நமது பாவங்கள் யாவற்றையும் பலிபீடத்திலே பலியிட்டதாகப் பாவனை செய்து உள்ளே சென்று அர்ச்சனை செய்வித்து வணங்க வேண்டும். வழிபாடு முடிந்ததும் சிறிதுநேரம் ஆலயத்தில் ஓர் இடத்தில் அமைதியாக இருந்து தியானம் செய்வது அவசியம்.

ஆசாரமில்லாது ஆலயத்துக்குப் போதல், அங்கு உயர்ந்த ஆசனங்களில் இருத்தல், கால்நீட்டுதல், தோளிலே உத்தரியமிடுதல், உணவு, வெற்றிலை உண்ணல், பொடி இடுதல், விக்கிரகங்களைத் தொடுதல், பலிபீடம், விக்கிரகம், தூபி என்பவற்றின் நிழல்களை மிதித்தல், வீண்வார்த்தை பேசுதல் என்பன ஆலயத்திலே செய்யத்தகாத குற்றங்களாகும்.

தூபியின் நிழல் நிலத்தில் விழும்போது அதனை மிதியாமற் செல்ல இடமில்லாவிடில் அதனை ஐந்து பங்காக வகுத்து மூன்று பங்கை நீக்கி எஞ்சிய இரண்டு பங்கில் மிதித்துச் செல்லலாம். சுவாமி வீதி வலம்வரும்போது நிழலை மிதித்தல் பாவமாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயத்தின் நெகிழ்ச்சிப் போக்கு.

எமது சமயத்தின் மிகப்பெரிய பலம் என்னவென்றால்... அதன் நெகிழ்ச்சிப் போக்கு.

எமது சமயத்தின் மிகப்பெரிய பலவீனமும் அந்த நெகிழ்ச்சிப் போக்குத்தான்.

இது வியப்பான ஒன்று. இந்த நெகிழ்ச்சிப் போக்கைத் தமக்கு வசதியாக வளைத்தெடுப்பவர்கள் பலர் நம்மிடையே உள்ளதால்தான் பலவீனம் என எண்ணவேண்டியுள்ளது. நமக்குச் சுதந்திரமான வழிபாட்டு நெறிமுறைகளைத் தருவதால் அது பலமாகவும் இருக்கிறது.

வேறு சில சமயநெறிகளில் இருப்பதுபோல இது இப்படித்தான் என்ற இறுக்கமான கட்டுப்பாடுகள் இந்துசமயத்தில் இல்லை என்ற குறை நம்மவர்கள் பலருக்குண்டு. ஒரே விடயத்துக்குப் பல்வேறு வழிகள், பல்வேறு நடைமுறைகள் பல்வேறு தத்துவ விளக்கங்கள் சொல்லப்படுகின்றன.

இதனை எவ்வாறு விளங்கிக்கொள்ளலாம்?

இறைவனைச் சென்றடையப் பல்வேறு வழிகளைக் காட்டி அவரவர் தத்தமக்குப் பொருத்தமான வழிகளைக் கண்டு அவற்றைப் பின்பற்றலாம் என்பதே நமது சமயம் காட்டும் பாதையாகும். சரியை முதலிய நான்கு நெறிகளும் இத்தகையதே.

அடிப்படைக் கோட்பாட்டிலோ நோக்கத்திலோ எந்தவித ஐயமுமில்லை. அவை தெளிவாக - இறுக்கமாக அறுத்துறுத்துச் சொல்லப்பட்டிருக்கும். அதுதான் நமது சைவ சித்தாந்தம். அதன் நடைமுறைகளில்தான் வேறுபாடு.

இதனை சுருதி, யுக்தி, அனுபவம் என்ற அடிப்படையில் விளங்கிக்கொள்ளலாம்.

"இது இப்படித்தான்" என்று விதித்திருக்கும் வேத சிவாகம நெறிமுறைதான் சுருதி. அது அசைக்கமுடியாதது. அந்த நெறிமுறை விதிக்கு எவ்வித மாறுபாடும் இல்லாத வகையில் கால தேச வர்த்தமானங்களுக்கும் இடம் பொருள் ஏவல்களுக்கும் பொருந்தும் வகையில் நடைமுறைப்படுத்துவது யுக்தி. இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் முன்னோர்களும் அறிஞர்களும் நடைமுறைப்படுத்தியதை நாமும் பின்பற்றிச் செல்வது அனுபவம்.

ஒரு கிரியையைச் செய்யும்போதோ ஒரு விரதத்தை அனுஷ்டிக்கும்போதோ ஒரு விழாவை நடத்தும்போதோ அதனை விரித்துச் செய்வதற்கும் சுருக்கிச் செய்வதற்கும் வேறுபட்டுச் செய்வதற்கும் இடம் உண்டு என்பதை இதன்மூலம் புரிந்துகொள்ளலாம்.

எனவே, "அவர் அவ்வாறு செய்கிறார், இவர் இவ்வாறு செய்கிறார், எது சரி? என்ற கேள்வி எழும்போது அடிப்படை நோக்கம் என்ன என்பதை உன்னிப்பாக அவதானிக்கவேண்டும். சடங்காசாரமாக மேலே போர்த்தப்படும் நடைமுறைகள் அதற்கு முரண்படாமலும் யாருக்கும் இடைஞ்சல் இல்லாமலும் பலருக்கும் நன்மைபயக்கும் வகையிலும் இருந்தால் சரி.

பழமை என்பதால் ஒன்றைப் போற்றுவதோ, புதுமை என்பதால் ஒன்றைப் புறக்கணிப்பதோ பொருத்தமன்று. மறுதலையாக, பழமை என்பதால் வெறுப்போ புதுமை என்பதால் விருப்போ கொள்வதும் தகுந்ததன்று. சிறந்ததாகவும் காலத்துக்கு உகந்ததாகவும் நமது மரபு முறைக்கு ஏற்றதாகவும் நமது அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முரண்படாததாயும் உள்ளவற்றை வரவேற்றுக் கைக்கொள்வோமாக.

PROF. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணினி வடிவமைப்பு
ஸ்ரீவித்யா கணினி அச்சகம், இணுவில்.
T.P : 222 6004

அச்சுப் பதிப்பு
மீனாட்சி அச்சகம், நல்லூர்.
T.P : 222 3586

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org